# இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

## பல்கலைக்கழக அனுமதி – கல்வியாண்டு 2022/2023

### மொழிபெயர்ப்புக் கற்கைகளில் (சிங்களம்/ஆங்கிலம்) கலைமாணி (கௌரவ) பட்டப்படிப்பினைத் தொடர்வதன் பொருட்டு தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பங்களைக் கோரல்

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தில் நடைபெறும் மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 'இலங்கைப் பல்கலைக்கழகங்களில் 2022/2023 கல்வியாண்டுக்கான கலைமாணி பட்டபடிப்புகளுக்கான அனுமதி தொடர்பான கையேட்டின் 2.2.8.25 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பல்கலைக்கழக அனுமதிக்கான குறைந்த பட்சத் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் குறிப்பிட்ட பாடப்பிரிவில் அனுமதி பெற விரும்பினால் மேற்குறிப்பிட்ட தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பித்து அப்பரீட்சையில் தேர்ச்சியடைதல் வேண்டும்.

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடத்தின் மொழிகள் துறையானது கலைமாணி பட்டதாரிகளுக்கு மொழிபெயர்ப்பு சார்ந்த கோட்பாட்டு மற்றும் செயற்பாட்டு ரீதியான அறிவை வழங்கும் பொருட்டு மொழிபெயர்ப்புக் கற்கைகளில் (சிங்கள/ ஆங்கிலம்) கலைமாணி (கௌரவப்) பட்டம் எனும் பட்டப்பாடநெறியினை அறிமுகப்படுத்தியுள்ளது. தேசிய மும்மொழிக் கொள்கையை செயல்படுத்த முன்னுரிமை அளித்தல் வேண்டும் என்ற இலங்கையின் தேசிய தேவையினைப் பூர்த்தி செய்வதற்கான ஒட்டுமொத்த மூலோபாய முயற்சியின் ஒரு பகுதியாக அறிமுகப்படுத்தப்பட்ட, நிபுணத்துவம் வாய்ந்த இக்கற்கைநெறி நான்கு வருட பட்டப்பயில்பாடநெறியாகும்.

2022 ஆம் ஆண்டு G.C.E (A/L) தேர்வில் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் தோற்றிய விண்ணப்பதாரர்கள் மேற்கூறிய தகுதிகாண் பரீட்சையில் பங்கேற்கத் தகுதியுடையவர்களாவர். நான்கு வருட பட்டப்படிப்பை திறம்படவும் வெற்றிகரமாகவும் முன்னெடுத்துச் செல்லும் வகையில் மொழி (சிங்களம்/ ஆங்கிலம்) புலமை கொண்ட மாணவர்களின் குழுவை தெரிவு செய்வதே இத் தகுதிகாண் தேர்வின் நோக்கமாகும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் தகுதிகாண் தேர்வுக்கான விண்ணப்பங்களை 2023 செப்டெம்பர் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன் www.sab.ac.lk என்ற பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள விண்ணப்ப இணையதள முகப்புப் பக்கத்தினூடாக (https://www.sab.ac.lk/trl-aptitude-test/) நிகழ்நிலையில் (Online) சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்ப முகப்புப் பக்கத்தில் உங்களுக்கான கணக்கினை உருவாக்கி அப்பக்கத்திற் காணப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி 1500 ரூபாவினை செலுத்துவதோடு, பின்வரும் ஆவணங்களின் தெளிவான வருடப் பிரதிகளையும் (scanned copies) இணைத்தல் வேண்டும்.

- பொது சாதாரணப் பரீட்சையின் பெறுபேறுகள் உள்ளடங்கலாக உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றுத்தாளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி. (***doenets.lk*** மூலம் தரவிறக்கம் செய்யப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட பெறுபேற்றுத் தாளும் ஏற்றுக்கொள்ளப்படும்.)
- விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் மற்றும் பிற ஆவணங்களில் ஏதேனும் வேறுபாடுகள் இருப்பின், அவை பற்றி தெளிவுபடுத்தும் சத்தியக் கடதாசி மற்றும் சான்றிதழ்கள்.

**தபால் மூலம் அனுப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

தகுதிகாண் பரீட்சை நடைபெறும் திகதி, நேரம் மற்றும் இடம் என்பன தொடர்பில் பின்னர் அறியத்தரப்படும் அதேவேளை, பரீட்சை அனுமதி அட்டை விண்ணப்ப இணையதள முகப்புப் பக்கத்தில் (online application portal) தரவிறக்கம் செய்து கொள்ளக்கூடிய வகையில் பதிவேற்றம் செய்யப்படும். தகுதிகாண் பரீட்சைக்கு சமூமளிக்கும் தினத்தன்று பரீட்சை அனுமதி அட்டையின் வன்பிரதியினை சமர்பித்தல் வேண்டும்.

பதிவாளர்
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
பெலிஹுல்லோயா
14-09-2023